DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No.18/2024**

**2024-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 09- ம் நாள் திங்கள்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 02 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.சரவணன் இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 2 | தொழில் | - | நடத்துனர் |
| பெயர் | - | கருப்பசாமி | வட்டம் | - | பொள்ளாச்சி |
| த/பெ | - | வேலுசாமி | சமயம் | - | |
| கிராமம் | - | புளியகன்டி ஆ ழியார் | வயது | - | 52/2024 |
| சாதி | - | | | | |

**09.12.2024**

**(1, 2 எதிரிகள் ஆஜர்)**

**முதல் விசாரணை:**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து அரசு போக்குவரத்து கழகத்தில் நடத்துனராக பணிபுரிந்து வருகிறேன். அ .சா.1 பெருமாள் என்பவரை தெரியும். அவர் அரசு பேருந்து ஓட்டுனர் ஆவார். ஆஜர் எதிரிகளை தெரியும். கடந்த 07-08-2023-ம் தேதி திங்கட்கிழமை மாலை 06.30 மணிக்கு பொள்ளாச்சியில் இருந்து TN 38 N3028 என்ற அரசு பேருந்தை ஷேக்கல்முடி செல்வதற்காக அ.சா.1 பெருமாள் ஓட்டுனராகவும் நான் நடத்துனராகவும் இருந்து பேருந்தை இயக்கினோம். இரவு 09.00 மணியளவில் வால்பாறை ஸ்டேன்மோர் பிரிவில் ஷேக்கல்முடி செல்வதற்காக பேருந்தை அ.சா.1 திருப்பியபோது ஆஜர் எதிரிகள் பேருந்துக்கு முன்பாக நின்று பேருந்துக்குள் வழிவிடாமல் நின்றுகொண்டிருந்தார்கள். அ.சா.1 ஹாரன் அடித்தார் அவர்கள் விலகவில்லை. அ.சா.1 இறங்கிசென்று அவர்களை விலகசொல்லுமாறு கூறினார். நான் சென்று எதிரிகளை விலகசொல்லும்போது அவர்கள் விலகமுடியாது என்றும் ஓட்டுநரை வரச்சொல்லு என்றும் கூறினார்கள். அசா.1 பேருந்திலிருந்து இறங்கிவந்து எதிரிகளை விலகசொல்லும் போது நீ என்ன பெரிய புடிங்கியா என்று சொல்லி ரஞ்சித் என்பவர் அ.சா.1-ன் கன்னத்தில் ஓங்கி அறைந்தார். மற்றொரு எதிரி அ.சா1 காலால் எட்டி உதைத்தார். அதில் அ.சா -1 கீழே விழுந்துவிட்டார். நான் அ.சா.1 ரை எழுப்பிவிட்டேன். எதிரிகள் எங்களை பார்த்து நாங்கள் யார்என்று தெரியுமா என்று கூறி நாங்கள் உங்கள் இருவரையும் பேருந்தில் வைத்து கொளுத்திவிடுவோம் என்று கொலை மிரட்டல் விடுத்தார்கள். அங்கு கூட்டம் கூடி விட்டது. நாங்கள் காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவித்தோம். போலீசார் சம்பவயிடத்திற்கு வந்தார்கள். நாங்கள் பேருந்தை வேறு ஓட்டுநர்களை வைத்து, பேருந்து பணிமனைக்கு கொண்டு சென்றுவிட்டார்கள். அ.சா.1-ஐ ஆட்டோவில் ஏற்றி வால்பாறை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று சிகிச்சையில் சேர்த்தோம். சம்பவம் குறித்து போலீசார்

என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜரிலிருந்து குறுக்கு விசாரணை இல்லை என்றார்.

**<u>மறு விசாரணை</u>** :இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.